184870

JL
L6m 211, N28ST
N27.1.3.4
184870

Registered No. M. 1640. வருஷச் சந்தா ரூபா. 1.

1-MAY 1928
BOOKS
MADRAS

# ஸ்ரீ தன்வந்தரி

## ஆயுர்வேத வைத்திய பக்ஷ பத்திரிகை.

ஒவ்வொரு திரயோதசிக்கும் வெளியாகும்.

சென்னை ஆயுர்வேத கலாசாலையின்

பழைய மாணவர்களின் சங்கத்தின் சார்பில் பிரசு

பத்திராதிபர். டாக்டர். ஆ. லக்ஷ்மீபதி, பி. எ., எம். பி., ஸி. எம்.,

உதவிபத்திராதிபர் உ. ர. அரங்கசாமி ராஜு.

மலர். 1. | 1927வு நவம்பர்மீ | இதழ். 3-4.

## பொருளடக்கம்.

—:o.—

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | சோர்னம் | 1—2 |
| 2. | வியாயாம சாஸ்திரம் | 3—4 |
| 3. | வியாதிகளின் குறிப்பு | 4 |
| 4. | ஔஷத முறைகள் | 5—6 |
| 5. | ஆவடி ஆரோக்கிய ஆச்சிரமம் | 7—9 |
| 6. | சென்னைபுரி ஆயுர்வேத கலாசாலையின் பழைய மாணவர் சங்கம் | 9 |
| 7. | நாம உபயோகமான ஔஷதச் சரக்குகள் | 5-12 |

# ஆவடி ஆரோக்கிய ஆஸ்ரமம்.

சென்னைக்கு அருகாமையில் எல்லா சுப லக்ஷணங்களும் பொருந்திய பரிசுத்தமான காற்றோட்ட முடைய இயற்கைச் சிகிச்சைக் குரிய இடம்.

இயற்கைச் சிகிச்சை-சூரியஸ்நானம்.



காற்றுஸ்நானம்-ஜலஸ்நானம்.

நாற்புறமும் சூழ்ந்துள்ள ஆரண்யங்களுக்கிடையில் அமர்ந்திருக்கும் இத்தோட்டத்தின் இயற்கையான உன்னத ஸ்தானமும், மிருதுவான மணல் பூமியும், பசுமையான புல்தரையும், எவ்வேளையிலும் குளிர்ச்சி தரும் நிழலும் இவ்விடத்தை ஓர் ஆரோக்கிய வாசஸ்தலத்திற்குத் தகுதியாக ஆக்குகின்றன.

**டாக்டர் முத்து, எம்.டி ,எம் ஆர்.ஸி.எஸ். (லண்டன்), அவர்கள்.**

மேற்படி ஆரோக்கிய ஆச்ரமத்தின் அஸ்திவாரக்கல்லை நாட்டும்பொழுது சொன்னதாவது :—

"நம்முடைய முன்னோர்கள் நல்லகாற்று வீசும் இடங்களில் வசித்தனர் நம் ரிஷிகளும் வனங்களையே விரும்பினர், அங்கேயே குடியிருந்தனர் ; அவ்விடங்களிலேயே மகா நாடுகளைக் கூட்டினர் ; பாடசாலைகளையும் ஏற்படுத்தினர். இது போன்ற ஆச்ரமங்கள் நம்மை மீண்டும் இயற்கை வாழ்வை அடையச் செய்ய ஹேதுவாயிருக்கின்றன, தற்கால நாகரீகம் முதிர்ந்தவர்கள் இத்தகைய வாழ்வுதான் அவசியமென்று வற்புறுத்துகின்றனர்

மிதமான சார்ஜுகள்.

**டாக்டர் ஆ. லக்ஷ்மீபதி, பி.ஏ., எம்.பி. ஸி. எம், பிஷக்ரத்ன,**
மானேஜிங் டைரெக்டர்'
**19, ஹாரிஸ் ரோடு, மதராஸ்.**

1928
MADRAS

# ஸ்ரீ தன்வந்தரி.

பத்திராதிபர்.
ஆ. லக்ஷ்மீபதி.

19, ஹாரிஸ் ரோட்,
மவுண்ட் ரோட் போஸ்டு, மதராஸ்.

ஐயா,

நாங்கள் எங்கள் “ஸ்ரீ தன்வந்தரி” எனும் பத்திரிகையை தங்களுக்கு மாதிரிப் பிரதி ஒன்று அனுப்பி யிருக்கின்றோம். இம்மாதிரிப் பத்திரிகை தமிழ் நாட்டிற்கு இன்றி யமையாததென்பது எல்லோருமறிந்த விடயம். இதில் வைத்தியர்களுக்கு வேண்டிய முக்கியமான விஷயங்களைப்பற்றிய வியாசங்களும், அனுபவ முறைகளும் இன்னும் இதரர்களால் விரும்பக்கூடிய சுகாதார விதிகளைப்பற்றிய சமாசாரங்களும் வெளிவரும். எல்லோருக்கும் இப்பத்திரிகை எளிதில் கிடைக்கும் பொருட்டு வருடச் சந்தாவை ஒரு ரூபாயாக ஆக்கி யுள்ளோம். தங்களுடைய பூரண ஆதரவை நம்பி எங்களது அடுத்த பிரதியை தங்களுக்கு வி. பி. பி. மூலமாக அனுப்புகின்றோம்.

இப்படிக்கு,
பத்திராதிபர்.

# ஸ்ரீ தன்வந்தரி

ஆயுர்வேத வைத்திய பக்ஷ பத்திரிகை.

ஒவ்வொரு திரயோதசிக்கும் வெளியாகும்.

சென்னை ஆயுர்வேத கலாசாலையின்

பழைய மாணவர்களின் சங்கத்தின் சார்பில் பிரசுரிக்கப்படும்.

மலர் 1. | 1927௵ நவம்பர்மீ | இதழ். 3-4.


## சொர்ணம்.

### வகைகள்.

பிராக்கிருதம், சகஜம், அக்னிசம்பவம், கனிஜம், ரசேந்திரவேதகஜம், என ஐவகைப்படும்.

### உற்பத்தி.

ரஜோகுணாத்மனான பிரமன், பிரமாண்டமனைத்தும் சொர்னத்தால் ஆக்கினான். இது பிராக்ருத சொர்னம். பிரமன் பிறந்தபோது அவனை சுற்றியிருந்த ஜராயுவை எடுத்தெறிய அது மகா மேரு பர்வத மாயிற்று. இது சகஜம். சிவன் தாங்கவந்த வீரியத்தைநெருப்பிலிட அக்னி சம்பவ பொன்னாயிற்று. இம் மூன்றுவித சொர்னங்களும் 16 மாற்றுடையவை. ஆங்காங்குள்ள பர்வதங்களிலும் சுரங்களிலும் கிடைப்பது கனிஜம். இது 14 மாற்றுடையது. ரசவாத கிரியைகளால் 18 சமஸ்காரங்கள் செய்யப்பட்ட ரசத்தை ஏனைய லோகங்களுடன் சேர்த்து அதனாலுண்டாக்கப்படும் தங்கத்திற்கு ரசேந்திர வேதகஜ மெனப் பெயர். இவைகளில் சாதாரணமாய் மருந்துகளில் உபயோகப்படுத்துவது கனிஜ சொர்னம்.

### சுத்தி.

1. சொர்னத்தை மெல்லிய தகடுகளாய் அடித்து பழுக்கக்காய்ச்சி, காடி எண்ணெய் பசுமூத்திரம், கொள்ளுக் கஷாயம் இவற்றில் ஒவ்வொன்றிலும் மூன்று தரம் தோய்க்க வேண்டும்.

2. தங்கத்தை மெல்லிய தகடாய் அடித்து அதற்கு செம்மண் லேபம் செய்து நெருப்பைப் போல் காய்ச்சினல் சுத்தியாகும்.

3. ஒரு தோலா தங்கத்தை மெல்லிய தகடாய் அடித்து ஒரு தோலா உப்புடன், அகலில் வைத்து சீலைமண் செய்து அக்னியிலிட்டு ½ ஜாமம் ஊதி யெடுத்தால் தோஷம் நீங்கி சுத்தியாகும்.

### தங்க பஸ்மம்.

1. குச்சியால் குத்த துளையாகும் படி சுத்தி செய்த தங்க தகட்டிற்கு பழச் சாற்றில் ரச பஸ்பத்தை அரைத்து லேபம் செய்து அகலில் இட்டு கெஜபுடம் போடவும் இவ்விதம் 10 புடமிட பஸ்பமாம்.

2. சுத்தம் செய்யப்பட்ட தங்கத்தகட்டை சிறு துண்டுகளாக வெட்டி அதன் சமயெடை ரசஞ் சேர்த்து அரைத்து உருண்டையாகச் செய்து வைத்துக் கொள்ளவும் இவ்விரண்டிற்கும் சமயெடை கந்தகத்தை மாவாகத் தூள் செய்து, ஓர் அகலில் பாதி தூள் பரப்பி அதன் மேல் உருண்டையை வைத்து, மீதியுள்ள கந்தகத்தை மேல் போட்டு,மற்றொரு அகலால் மூடி, சீலை மண் செய்து 50 வரட்டியில் புடம் போடவும். இவ்விதம் 14 தரம் புடமிட தங்கம் நிருத்தமாக பஸ்பமாகும்

3. 1 தோலா தங்கத்தகட்டையும் ஒரு தோலா ரசத்தையும், ரசம் தங்கத்தை சோஷிக்கும் வரையில் கல்வத்திலிட்டு அரைத்து, பிறகு இரண்டு தோலா கெந்தகத்தையிட்டு அரைத்து கஜ்ஜலி செய்யவும். ரசம் மறுபடியும் ஜனிக்காதவாறு கஜ்ஜலியை நன்றாய் அரைக்க வேண்டும். இந்த கஜ்ஜலியை மூசையிலிட்டு புடம் போடவும். இவ்விதம் 14 தரம் செய்ய சொர்ணம் நன்றாக பஸ்மமாகும்.

### குணம்.

சீதம், குரு, இனிப்பு அல்லது கசப்பு சுவை இரஸாயனம் என்கிற குணங்களை பொருந்தியுள்ளது தாதுக்களை போஷிக்கும். விஷ தோஷங்களைப் போக்கும். புத்தி, ஞாபக சக்தி இவற்றை விருத்திசெய்யும். ஸ்வாச, காஸ, க்ஷயம், வாதரோகங்கள் கபும்ஸகம் முதலிய வியாதிகளைக்கண்டிக்கும்.

அளவு:—¼—1 குன்றி.

### உபயோகம்.

### 1. இரஸாயனம்.

தங்கம் தாருட்டிய காரியாக விசேஷமாக உபயோகப்படுத்தப் படுகிறது. ஒரு குன்றி தங்க பஸ்பம் தாமரை விதையுடன் அல்லது தேன், நெய், நெல்லிக்காயுடன் கொடுக்கப்படுகிறது.

ஆயுர்வேதத்தில் மிகவும்பிரஸித்தி பெற்ற ரஸாயன மருந்து மகரத்துவஜம். தங்கம் ஒரு தோலா, ரசம் 8 தோலா சேர்த்தரைத்து கெந்தகம் 16 தோலா சேர்த்து நன்றாக அரைக்கவும். செம்பருத்திப் பூச்சாற்றாலும், கற்றாழைச் சாற்றாலும் வகைக்கு 12 ஜாமம் அரைத்து, ரவியில் உலர்த்தவும். பிறகு சீலை மண் செய்த காசிக்குப்பியில் அரை வாசி அடைத்து, ஒரு சட்டியில் 4 விரக்கடை மணல் கொட்டி அதின் மேல் சித்தப்படுத்திய குப்பியை வைத்து, மீண்டும் குப்பியின் கழுத்து வரையில் மணல் கொட்டி, தீபாக்கினிபோல் 4 ஜாமம் கமலாக்கினிபோல் 4 ஜாமம், காடாக்கினிபோல் 4 ஜாமம், இவ்விதமாக 12 ஜாமம் எரிக்கவும் கெந்தகம் உருகி எரிய ஆரம்பிக்கும்போது, மேல் மூடியைத்திறந்து, இரும்பு சலாகையால் கிளரி கொடுத்து மறுபடியும் மூடிஎரிக்கவேண்டும். வேண்டிய எரிப்பு ஆன பின் அணலை நீக்கி சாங்க சீதளமாய் ஆறின பிறகு குப்பியை உடைத்து அதின் கழுத்தைச்சுற்றி பலகை பலகையாய் பற்றியிருக்கும் செந்தூரத்தை எடுத்துக் கொள்ளவும். இது தான் மகரத்துவஜம். ஒரு குன்றி மகரத்வஜத்தை தேன் அல்லது வேண்டிய அநுபானங்களில் கொடுக்க சிறந்த ரஸாயனமாகும். நரம்புத்தளர்ச்சி, பலஹீனம், மனோவியாகூலம் முதலியவை குணமாகும்.

(தொடரும்)

சுந்தரம்,

184570.
சென்னை-600 008





சொல்லு முலகம் துயரற் றிருந்திடவே
வெல்லுமுபாயம் விரும்பியசீர் நல்லுரவோன்
மன்வக் தரம்போற்ற மாமருந்து நூற்கண்ட
தன்வந் தரிதாள் சரண்.

ஆதி மருத்துவநூல் ஆரிடத்திற் கண்டபடி
மேதினியோர் போற்ற விளக்கிய நற்

—போதகராம்

நற்பண்டித கோபாலாச்சாரி நற்பதங்கள்
பொற்புறவே எந்நாளும் போற்று.

---

## வியாயாம சாஸ்திரம்.

### (தேகப்பயிற்சி முறைநூல்)

### அத்தியாயம். 1

### முகவுரை.

#### சுசி.

இந்துக்கள் மனோ வாக்கு காய சுத்திக்கும் நல்லொழுக்கத்திற்கும் (தர்மம்) பெயர் பெற்றவர்கள். பிச்சை எடுக்கும் ஏழையுங்கூட தன் வாயை நன்றாய்க் கழுவாமல் ஒன்றும் அருந்தான். பற்களைத் துலக்காமல் காலையில் ஒன்றும் புசிக்க நம் நாட்டார் ஒருவரும் துணிய மாட்டார்கள். ஏதாகிலும் சாப்பிட்ட பின் வாயை ஐந்து ஆறுதரம் நீர் விட்டுக் கொப்பளிக்கும் பழக்கம் நம் நாட்டில் ஒவ்வொருவருக்கும் இயற்கையில் இருக்கிறது.

கூலி வேலை செய்பவனும் தன் வேலை தீர்ந்த பின் சாயங்காலம் வீட்டுக்குப் போகுமுன் வழக்கமாய் குளிக்கின்றான். இந்த நல்ல பழக்க வழக்கங்களை போதிக்கும் நீதி மொழிகள், ஆரோக்கிய சூத்திர மெனும் மருத்துவ சாஸ்திரத்திலும் தர்ம சாஸ்திரத்திலும் மத சாஸ்திரங்களிலும் செவ்வனே சொல்லப் பட்டிருக்கின்றன. இவைகளைச் சிறிய வயதிலேயே நம் குழந்தைகளுக்குப் போதித்து வந்திருக்கிறார்கள். நாகரீகத்திற் சிறந்த நம் நாட்டில் எல்லா வழிகளிலும் பூர்வ காலத்திலிருந்து சுகாதார அபிவிருத்தியின் பொருட்டு வேலைகள் நடத்தப்பட்டு வந்துள்ளன. அசோகர் நம் நாட்டில் பொது ஜனங்களின் உபயோகத்தின் பொருட்டு நானாவித தேசிய பாஷைகளில் சுகாதாரத்தை வற்புறுத்தும் நீதி மொழிகளைக் கற்கம்பத்தின் பேரில் எழுதி நாட்டியுள்ளார். சந்திரகுப்தர் காலத்திலுண்டான சாணக்கியர் அர்த்த சாஸ்திரம், தர்ம சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட வழிகளினின்று நழுவினவர்க்குக் கடுமையான தண்டனைகளைக் கொடுக்கிறது.

அந்நிய நாட்டுக் கல்வியும் நாகரீகமும் நமது நாட்டில்வர ஆரம்பித்ததும் நமது நாட்டு சாஸ்திரங்களை மறந்து அவைகளில் சொன்ன புத்திமதிகளைப் பின் பற்றாமல் ஆரோக்கியத்தை இழந்து விடுகிறோம். ஜனங்களை கண் மூடித்தனமாய் பிற நாட்டு முறைகளைப் பின் பற்றுவதை நிவர்த்தி செய்யும் பொருட்டு நாங்கள் ஆரோக்கிய சூத்திரத்தை விரிவுரையோடு எழுத முன்னிட்டோம்.

JL
LCm211, N28ST N27.1:3-4

## பிரசார வேலையின் முக்கிய அவசியம்.

தற்காலத்தில் வித்தைகளுக்கு முக்கிய இருப்பிடமானதும் தற்கால நாகரீகத்தை பரப்புவதற்கு தகுந்த இடங்களுமாகிய பெரிய பட்டணங்களிலும்நகரங்களிலும் இக்காலத்தில் அதர்மங்கள் நாளுக்கு நாள் விருத்தியடைகின்றன. ஆயிரக்கணக்கான சிறிய குழந்தைகள் காற்றின் அசுசியான நிலைமையில் உயிர் துறக்கின்றனர். இப்பட்டணங்களைக் காட்டிலும் குக்கிராமங்கள் குடியிருப்பதற்கு ஏற்ற விடங்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் தற்காலத்தில் அவைகளும் நாளுக்கு நாள் அரைப் படிப்புப் படித்த வாலிபர்களால் கெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாலிபர்கள் அங்கிருக்கும் முற்காலத்து பெரியோர்களிடத்தில் பயமாவது பக்தியாவது கொண்டவர்களல்ல. இன்னும் போதாக் குறைக்கு தற்காலத்தில் நாகரீகத்தில் மூழ்கின பெரியோர் என்று சொல்லப்படும் பெரியார்கள் பறங்கி நோய் முதலிய ஒட்டுவாரொட்டி நோய்களை நமது குக்கிராமங்களில் பரப்ப ஆரம்பிக்கின்றனர். இவைகளை எல்லாம் தடுப்பதற்குக் கிராமங்களில் சுகாதாரப் பிரசாரம் செய்ய வேண்டுவது மிகவும் முக்கியமானது. தாய் பாஷையில் உபந்நியாசங்களும், துண்டுப்பத்திரிகைகளும், கண்காட்சிகளும் நடத்தப்பட வேண்டும். இப்பேர்ப்பட்ட வேலை உபாத்திமார்களாலும் சுகாதார உத்தியோகஸ்தர்களாலும் சர்வகலாசாலைகளாலும் நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளில் எங்களால் இயன்றதைச் செய்வதின் பொருட்டு இச்சிறு விஷயத்தை தகுந்த ஆதாரங்களோடு நமது பழைய சாஸ்திரங்களாகிய சுஸ்ருதம், சரகம் முதலிய திருமுறைகளிலிருந்து எடுத்து உதவுகின்றோம். (தொடரும்)

# வியாதிகளின் குறிப்பு.

(தொடர்ச்சி).

## பாண்டு (Anaemia.)

**விவரணம்:**—இது ரக்தக்குறைவினால் உண்டாகிறது. ரக்தத்தில் நிறைத்தைக் கொடுக்கக்கூடிய ரஞ்சக பித்தம் குறைதல். இவ்வி ரஞ்சக பித்தம் இருப்புச் சத்தையும் பிராண வாயுவையும் தேகத்தில் எல்லா அவையவங்களுக்கும் நாம் சுவாசிக்கும் காற்றோடு நுரையீரல் வழியாகச் செலுத்தும். அது தடைபடல்,

**காரணங்கள்:**—போதுமான சூரிய ரசமியில்லாமை, சரியான ஆகாரமின்மை, போதுமான சுத்த காற்றும் சரீர அப்பியாசமுமின்மை, மனக்கவலை, ரக்த மூலம், ரக்தப் பிரதரம், மூக்கின் வழியாய் ரக்தம் கசிதல், திடீரென்று அடிப்பட்டு ரக்தம் வெளியாதல், பறங்கிநோய், கண்டமாலை மலேரியா என்னும் விஷம சுரம் அடிக்கடி உண்டாதல் இவை போன்ற நாட்பட்ட வலிமையைக் குறைக்கும் ரோகங்கள்.

**குறிப்புகள்:**—கண்கள், உதடுகள், ஈறுகள், நகங்கள் வெளுப்படைதல், மலபந்தம், பசியின்மை, இருள்வாசம், வாந்தி, சோம்பல் அதிக கோபம், தலைவலி, இருதயத்துடிப்பு, களைப்பு. பெரு மூச்சு இவைகளோடு பாதங்கள் வீக்கமுண்டாகும். இவ்வீக்கம் இரவு ஓய்வால் சில சமயம் மறைந்து விடும்.

## (தமக சுவாசம்) Asthma.

சுவாஸக் குழாய்களின் மாமிச பேலிகள் வலியுடன் சுருங்கல். இதில் இரண்டு விதங்களுண்டு:—இசுவு, சுவாஸக்குழாயைப் பற்றின தொன்று.

### பிரதான காரணங்கள்.

தீவிர புகை முதலியவைகளைச் சுவாசித்தல் திடீரென்று சீதோஷ்ண நிலைமை ஈரமாதல், சாப்பாட்டில் குறைவு ஏற்றம் சுவாசக்குழாய்களின் வழியாய் தூசு துய்புகள் உட்செல்லல்.

### அப்பிரதான காரணங்கள்.

பாம்பரை, வயிற்றுப்பிசம் உஷ்ணவாயு, மலபந்தம், திமிர்வாதம், எதிர் பாராத வியப்பு. பயம், கோபம், விசனம், நுரையீரலைப்பற்றியதும் இருதயத்தைப் பற்றினதுமான சில வியாதிகள். புல் முதலியவைகளிலிருந்தும் இதர செடிகளிலு மிருந்து சூகங்கள் மூக்கு துவாரத்தின் வழியாகப்போய் ஒரு வித சுவாஸத்தை உண்டாக்குகிறது.

(தொடரும்)

உ. ர. அரங்கசாமிராஜு.



# ஔஷத முறைகள்.

(தொடர்ச்சி.)

## சந்தனாஸவம்.

| | |
|---|---|
| சந்தனம் | 16 தோலா |
| ரக்தசந்தனம் | ,, |
| தேவதாரு | ,, |
| சாலதேவதாரு | ,, |
| சித்ர மூலம் | ,, |
| த்ருவருத் | ,, |
| ஹரித்ரா | ,, |
| தாருஹரித்ரா | ,, |
| சதாவரீ | ,, |
| ஆமலகி | ,, |
| வாஸா | ,, |
| பலா | ,, |
| சாரிபா | ,, |
| அனந்தமூலம் | ,, |
| வால்மிளகு | ,, |
| கருவேலம்பட்டை | ,, |
| வருணத்வக் | ,, |
| பாஷாணபேதி | ,, |

திருக்ஷை 40 பலம் அல்லது 8 பவுண்டு.
தாதகி 32 பலம்.

மேல் கண்ட திரவியங்களை 384 பவுண்டு ஜலத்திலிட்டி சந்தி பந்தனம் செய்து 1 மாத காலம் பூமிக்குள் புதைத்துவைத்து எடுத்து 2 முதல் 4 திராம் வரை நாள் 1-க்கு 2 முதல் 4 தடவை ஒரு அவுன்ஸ் ஜலத்துடன் உட்கொள்ள இது சுக்கிர தாதுவின் கோளாறுகளையும் இரஜஸ்ஸின் (சோணிதத்தின்) கோளாறுகளையும் மூத்ர (நீர்) அவயவங்களிலும் மூத்திரத்திலும் உண்டாகும் கோளாறுகளையும் போக்கும். எல்லா மேகங்களிலும் எல்லாவித நீர்ச்சுருக்கிலும், வெள்ளை (கெனேரியா) முதலிய மேஹங்களிலும் நல்ல குணத்தைத்தரும். இது நீரைப்பற்றியதும் துர்நிமித்தத்தாலும் சரீர உஷ்ணம் அதிகரிப்பதாலும் உண்டாகும் நோய்களில் மிகவும் சிறந்தது.

## தசமூலாரிஷ்டம்.

| | |
|---|---|
| தச மூலக்வாத சூர்ணம் | 10 பவுண்டு. |
| சித்ரமூலம் | 5 ,, |
| கோஷ்டம் | 3 ,, |
| லோத்ரா | 4 ,, |
| குடூசீ | 4 ,, |
| ஆமலகி | 3 ,, |
| துராலபா | 2 ,, |
| விடங்கம் | 1 ,, |
| கோஷ்டம் | 16 தோலா |
| கதிரா | 1 ,, |
| ஹரீதகி | 1 ,, |

மஞ்சிஷ்டா, தேவதாரு, லோத்ரா, விடங்கம், யஷ்டி, ப்ரியங்கு, ஜீவக, பாரங்கி, பாக்கு, நன்னாறி, ரிஷபக, சுக்கு, கபித்தம், கிருஷ்ண ஜீரகம், மேதாத்வயம், மஞ்சள், தானிக்காய், த்ருவருத் ருத்தித்வயம், சோம்பு, புனர்னவா, ரேணுக, காகோலித்வயம், நாகேஸரம் சவ்யம், முஸ்தா, ருஸ்னா, பத்மகாஷ்டம், மாம்வலி, இக்ஷ்ரயவா, பிப்பிலி, கர்கடகச்ருங்கி,

வகைக்கு 16 ரூபாய் எடை எடுத்து ஜலம் 8 பங்கு சேர்த்து ¼ ஆக காய்ச்சி தேன் 6 பவுன் சேர்த்து திருக்ஷை 60 பலம், வெல்லம் 75 பவுன் சேர்த்து இத்துடன், தாதகி 6 பவுண்டு, தக்கோலம், உத்பலம், உசீரம் 2 பலம், செஞ்சந்தனம், ஜாதிக்காய், லவங்கம், த்வக், ஏலா, பத்ரா, கேஸரம், பிப்பலி, வகைக்கு 2 பலம் கஸ்தூரி ½ தோலா கல்க திரவ்வியங்களைச் சூரணித்துச் சேர்த்து ஒரு பாண்டத்திலிட்டு 1 மாதம் சந்திபந்தனம் செய்யவும்.

அளவு:—இதை 2 முதல் 4 அவுன்ஸ் எடுத்துக்கொண்டு நாள் ஒன்றுக்கு 2 முதல் 4 வேளை 10 முதல் 15 [illegible] பிப்பலி சூர்ணத்துடன் [illegible]கொள்ள.

செய்கை :—வாத சிலேஷ்ம ஜ்வரங்கள் ஸன்னிபாத ஜ்வரம், ஸூதிகா தோஷம், தாதுக்கள் க்ஷீணித்தல் (சோஷம்) சைத்தியம் (குளிர் நடுக்கம்) தலைச்சுற்றல் வியர்வை சுவாஸ நோய்கள் மார்பிடிப்பு, சோம்பல் தலை நோய் இவைகளை தீர்ப்பதில் நிகர் அற்றது. இதை வாதகஜாங்குச ரசவடி, அல்லது ஆனந்த பைரவ ரசவடியுடன் சேர்த்தும் கொடுக்கலாம்.

## திராக்ஷாரிஷ்டம்.

திராக்ஷை 9 பவுண்டு, ஜலம் 128 சராவம் இட்டு $\frac{1}{4}$ ஆக காய்ச்சி அதாவது 32 சராவம் ஆக காய்ச்சி எடுத்துக்கொண்டு அதில் குடம் 25 சராவம் சேர்த்து பதத்தில் கீழ் வரும் ப்ரக்ஷேப சூர்ணம் சேர்க்கவும்.

ப்ரக்ஷேப சூர்ணம்:—த்வக், ஏலா, பத்ர, கேஸர ப்ரியங்கணம்பூ, மிளகு, விடங்கம், பிப்பலி, மஞ்சிஷ்டா வகைக்கு 8 தோலா சேர்த்து மேற்கண்ட கஷாயத்துடன் சேர்த்து ஒரு பாண்டத்திலிட்டு சந்தி பந்தனம் செய்து 1 மாத காலம் வைத்திருந்து பிறகு எடுத்து உபயோகிக்கவும்.

அளவு:—வேளைக்கு, முதல் 4 திராம் வரையில் தினத்திற்கு 2 முதல் 4 வேளைகள் ஒரு அவுன்சு தண்ணீருடன் பருகவேண்டும். 1 அல்லது 2 அவுன்சை 4 5 மடங்கு அதிகமாயுள்ள ஜலத்தில் விட்டுப் பருகினால் நாவறட்சியையும் தேக சிரமத்தையும் போக்கும்.

செய்கை:—இரத்தத்தை சுத்தி செய்வதிலும் நரம்புகளுக்கு வலிவையும் கொடுக்கக் கூடியது.

உபயோகம்:—இது சரீர தாதுக்களுக்கு நல்ல வளர்ச்சியை யுண்டாக்குவதிலும் மலத்தை சோதனம் செய்வதிலும் மிகச் சிறந்தது. இதை லோகாசவத்துடனும் அய சம்மந்தமான மருந்துகளுடனும் கொடுக்க இருமல் க்ஷயம் முதலிய வியாதிகளைக்கண்டிக்கும்.

## ஜீரகாத்யரிஷ்டம்.

க்ருஷ்ண ஜீரகம் 19¾ பவுண்டு
ஜீரகம் 19¾ ,,

ஜலம் 256 சராவம் சேர்த்து அதை 64 சராவமாக காய்ச்சி சேஷ கஷாயமாக்கிக்கொண்டு அதில் தாதகீ 16 பலம் சுக்கு 16 தோலா ஜாதிக்காய் 8 தோலா, முஸ்தா 8 தோலா த்வக் பத்ரம், ஓமம், காகோலி ஏலா, கேஸரம், லவங்கம் வகைக்கு 8 தோலா சேர்த்து வெல்லம் 73½ சராவம் சேர்த்து சந்திபந்தனம் 1 மாத காலம் செய்யவும்.

அளவு:—ஒரு வேளைக்கு 2 முதல் 4 திராம் வரையில் தினத்திற்கு 2 முதல் 4 வேளைகள் ஜலத்துடன் பருகவேண்டும்.

செய்கை:—இரத்தத்தைச் சுத்தி செய்யும் ரசாயனம்.

உபயோகம்:—எல்லா வித சூதிகா வியாதிகளையும் கிரஹணி பேதி, அதிசாரம் முதலியவைகளையும் கர்ப்ப கோளாறுகளையும் போக்கும். குழந்தை பிரசவித்த பிறகு இதை கொடுக்க கிருமிகளால் உண்டாகும் கோளாறுகளையும் போக்கும்.

## கதிராரிஷ்டம்.

கிராதம் 12½ சராவம்

ஜலம் 128 சராவம் சேர்த்து $\frac{1}{4}$ ஆக காய்ச்சி சேஷ கஷாயம் 32 சராவம் ஆக காய்ச்சிக் கொண்டு பிறகு இத்துடன் குடம் 12½ சராவம், தேன் 6 சராவம் பிப்பிலிமூலம் 12 தோலா, பிப்பலி 12 தோலா, சவ்யம் 12 தோலா சித்ரகம் 12 தோலா, சுக்கு 12 தோலா, கிராதம் 4 தோலா சேர்த்து சந்திபந்தனம் செய்து 1 மாதகாலம் வைத்திருந்து பிறகு எடுத்துக் கொள்ளவும்.

அளவு:—வேளைக்கு 2 முதல் 4 திராம்வரை தினத்திற்கு 2 முதல் 4 வேளைகள் ஒரு அவுன்சு தண்ணீருடன் பருகவும்.

செய்கை:—இரத்தத்தை சுத்தி செய்வதில் ஒரு ரசாயனம்.

உபயோகம்:—இது இரத்தத்தை சுத்தி செய்வதில் மிகவும் சிறந்தது. இது முக்கியமாக குஷ்ட வியாதிகளை கண்டிக்கும். இது ப்லீஹோதரத்திலும (ஜ்வரக்கட்டி) ஸிபிலிஸ் என்னும் ரோகத்திலும் அதிலுண்டாகும் புண்களிலும் மிக்க நல்ல குணத்தை யளிக்கும்.

(தொடரும்)

ஜீ. ராமகிருஷ்ணன்.



# ஆவடி ஆரோக்கிய ஆச்சிரமம்.

## வைத்தியர் விடுதித் திறப்பு விழா.

1927ளு நவம்பர்மீ 20உ ஞாயிற்றுக் கிழமை மாலை 4-15 மணிக்கு ஆவடி ஹக்கீம் நகரிலுள்ள ஆரோக்கிய ஆச்சிரம வைத்தியரின் விடுதி திறந்து வைக்கப்பட்டது. இதற்குச் சென்னையிலிருந்து ஏராளமாக ஆயுர்வேதக்கல்லூரி மாணவர்களும் இந்திய வைத்தியப் பள்ளிக்கூட மாணவர்களும் அவற்றின் உபாத்தியாயர்களும், பல பொது ஜன ஊழியர்களும், பிரபல ஹிந்து முஸலிம் கனவான்களும் விஜயம் செய்திருந்தனர். அவர்களுள் முக்கியமானவர்களின் பெயர் வருமாறு:— கான்பகதூர் குதுஸ்பாட்சா சாகிப், கான்பகதூர் ஹக்கீம் அப்துல் அஸீஸ்பாட்சா சாகிப், ஜனுப் பஷீர் அமெட்கான், டாக்டர். கிருஷ்ணராவ், டாக்டர். முத்து, வைத்தியரத்னம் டாக்டர். பரத சாஸ்திரியார், வேங்கடகிரி ராஜா, ஸ்ரீமான்கள். வி. வெங்கடேஸ்வரலு, வி. என். முத்துரங்க முதலியார், ஹக்கீம் முக்தாரம் அஷாப்சாகிப், சுப்பராயகாமத். தர்ப்பங்கா மகாராஜா இக்கூட்டத்திறப்புவிழாவை நடத்தி வைப்பாரென்று எதிர் பார்த்து வந்திருந்த கூட்டத்திற்கு அவர் வர இயலாமற் போனது தெரிந்ததும் மிகுந்த ஏமாற்ற முண்டாகியது.

## ஸ்ரீமான் பட்டாபிராம ராவ்.

வந்திருந்தவர்களுக்கு நல்ல வரவு கூறிவிட்டுச் சொன்னதாவது:—தர்பங்கா மகாராஜா தமக்கு சுரங் கண்டிருப்பதால் தம்மால் வர இயலவில்லை என்றும் கூட்டத்தில் தலைமை வகிக்கின்றவரே வைத்தியரது விடுதியைத் திறந்து வைக்கலாமென்றும் செய்தி யனுப்பியிருக்கின்றார். இது நமக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்குமென்பதில் ஐயமில்லை. மகாராஜாதிராஜாவுக்கு தேக அசௌக்கியத்தினால் வர இயலா திருக்கும்பொழுது அவருக்குச் சீக்கிரம் சுரம் குணப்பட்டு அவர் தமது ஊருக்குச் சௌக்கியமாகப் போய்ச்சேர அருள்புரிய வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திப்பதே நமது கடைமையாகும். இக்கூட்டத்தில் தலைமை வகிக்கும்படி காளஹஸ்தி ராஜாவைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பிறகு காளஹஸ்தி ராஜா அக்கிராசனத் தமர்ந்தார்.

ஸ்ரீமான் பட்டாபிராமராவ் பிறகு ஆந்திர ஆயுர்வேத பார்மெஸி கம்பெனியின் சார்பாகத் தம்மால் வெளியிடப்பட்டிருந்த அழைப்பிற்கிணங்க அங்கு வந்திருந்தவர்களுக்கு எல்லாம் வந்தனமளித்து விட்டுப் பேசியதின் முக்கியாம்சமாவது:— ஆயுர்வேத வைத்தியமுறை சிறிது காலத்திற்கு முன்பு இருந்த விடம் தெரியாமல் மறைந்து கிடந்தது. ஜனங்கள் இதனை எப்படியோ வெகுகாலமாக மறந்து விட்டார்கள் வட இந்தியாவில் கவிராஜர்கள் (வைத்தியர்கள்) இம்முறை அடியோடு மறைந்து போகாமல் சற்று பிரகாசிக்கும்படி செய்துவந்தார்கள். காலஞ்சென்ற பண்டித கோபாலாச்சார்லு தென்னிந்தியாவில் இம்முறைக்குப் புத்துயிரளிக்க வெகு பாடுபட்டார். அவர் ஒரு ஆயுர்வேதக் கல்லூரியைத் திறந்து வைத்து சாஸ்திரோக்தமான மருந்துகளைத் தயாரித்து அக்கல்லூரி மாணவர்களுக்குக் கொடுத்து அதனை ஜனங்களுக்கு அதன் இலவச ஆஸ்பத்திரி மூலம் வழங்கும்படி செய்தார். இதிலிருந்து ஆயுர்வேதம் இக்காங்களுக்கு விசேஷ கிராக்கி ஏற்பட்டது. 6, 7 வருஷங்களுக்கு முன்பு கூட ஆங்கில வைத்திய முறையை அனுஷ்டித்து வந்த டாக்டர் லக்ஷ்மீபதி அதிர்ஷ்டவசமாக பண்டித கோபாலாச்சார்லுவின் ஆதிக்யத்தின் கீழ் வந்தார். அவரைப் பண்டித கோபலாச்சார்லு ஆயுர்வேத வைத்திய முறையில் சிரத்தை கொள்ளும்படி யாற்றிவிட்டார். 6 வருஷ காலமாக அவர் ஆயுர்வேத முறையில் வைத்தியம் செய்து வருவதுடன் யந்திரங்களின் உதவியைக் கொண்டு நாலஹரண மில்லாமல் ஏராளமாக மருந்துகளைத் தயாரித்து சப்ளை செய்வதற்காக கம்பெனியை 6 வருஷத்திற்கு முன்பு ஆரம்பித்தார். இக்கம்பெனி ஏற்பட்டு 6 வருஷமே யாகியபோதிலும் இதனால் ஆயுர்வேத மருந்தில் ஜனங்களுக்கு நம்பிக்கை

அதிகமாக ஏற்பட்டிருக்கின்றது. பல பார்மெஸிகளும் ஏற்பட்டிருக்கின்றன. பனகால் ராஜாவின துணையுதலால இந்திய வைத்தியப் பள்ளிக்கூடத்தைக் கவெர்மெண்டாரும் ஆரம்பித்திருக்கின்றார்கள். இம்மாதிரி ஆயுர்வேதத்திற்குப் பலவிதத்திலும் ஆதரவேற்பட்டுவருகின்றது. வெளியிலிருந்து வருகின்றவர்களைச் சுகாதாரக்கேடான நிலைமையிலிருக்கும் இடங்களில் வைத்துப் பரிஹரிக்க வேண்டியிருப்பதை உணர்ந்தார். சுற்று வட்ட நிலைமையே பரிகாரத்திற்கு முக்கியமென்பதை உணர்ந்து இவ்விடத்தில் ஆரோக்யாச்சிரமத்தை ஏற்படுத்தியிருக்கின்றார். இந்த இடம் மூலிகைகளை வளர்ப்பதற்காக வாங்கப்பட்டது. இதில் 3 வருஷங்களாக மூலிகைகளை வளர்த்துப் பார்த்தோம். அதற்கு இவ்வளவு இடம் தேவை இல்லை என்பதை உணர்ந்து வெளியூரிலிருந்து வரும் நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வதற்காக கட்டடங்களைக் கட்ட இதில் சிறிது இடத்தை உபயோகிக்கத் தீர்மானித்தோம். நோயாளிகளைச் சீக்கிரம் குணமாக்குவதற்கு அருகில் ஒரு வைத்தியர் இருக்கவேண்டியது அவசியமென்று கருதப்பட்டு இக்கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. மகாராஜாக்களும் மற்றவர்களும் இந்த ஆரோக்கிய ஆச்சிரமத்திற்கு தாராளமாக பொருளுதவி செய்வார்களென்று நம்புகின்றேன்.

## காளஹஸ்தி ராஜா.

கட்டடத்தைத் திறந்து வைக்கு முன்பு தெலுங்கு பாஷையில் சிலவார்த்தைகள் சொன்னார். அதன் சாரமாவது:—நமது நாட்டில் நல்ல ஸ்திதியில் இருந்த ஆயுர்வேத வித்தை கவர்மெண்டின் ஆதரவில்லாமையால் க்ஷீணித்துப் போய்விட்டது. தேச க்ஷேமத்தை உத்தேசித்து மகாராஜாக்கள் முதற்கொண்டு சாதாரணப் பிரஜைகள் வரை உள்ள எல்லோரும் அதற்கு உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கின்றனர். இங்கு இவ்வளவு பேர்கள் விஜயம் செய்திருப்பதிலிருந்தே ஆயுர்வேத வைத்தியமுறை மென்மேலும் பிரபல்யமடைந்து வருகின்றதென்பதற்கு அத்தாட்சியாகும். நாம் அனைவரும் இம்முறையின் உத்தாரணத்திற்கு உதவி செய்ய வேண்டும்.

## டாக்டர் லக்ஷ்மிபதி.

பிறகு பேசுகையில் பலம்தான் தேகஆரோக்கியத்திற்கான ஆதாரமாகுமென்றும் சுஸ்ருதர் பலம் மூன்று வகைப்படுமென்றும் அவை சகஜா (பெற்றோர் மூலம் பெறப்பட்ட பலம்) காலஜா (சுற்று வட்ட நிலைமையின் மூலம் பெறப்படும் பலம்) யுக்திஜா (மருந்துகள் மூலமும் தேகப்பயிற்சி மூலமும் பெறப்படும் பலம்) எனப்படுமென்றும், எரு எப்படி செடி கொடிகளின் வளர்ச்சிக்கு அவசியமானதோ அப்படியே மருந்துகளும் மனிதனுடைய சரீர வளர்ச்சிக்கு அவசியமானதென்றும் அதிக எரு விட்டால் எப்படித் தீங்கு நேருமோ அப்படியே அதிகமான மருந்துண்பதால் சரீரத்திற்குத் தீங்கு நேருமென்றும் தினம் மயிர்க்கால்களில் எண்ணெய்படும்படி செய்தால் மிகுந்த தேக ஆரோக்கிய முண்டாகுமென்று சுஸ்ருதர் சொல்லியிருக்கின்றாரென்றும் டாக்டர் முத்து ஆக்க மளித்ததால் ஏற்பட்டதென்றும் அவருடைய பிரசாரத்தின் முதற் பலன் இந்த ஆச்சிரமம் தான் என்றும் கான்பகதூர்கள் ஹக்கீம் அப்துல் அலீஸ் பாட்சா சாகிபும் பழம் தரத்தக்க 550 மாமரங்களைக் கொண்ட 114 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இந்த நிலத்தைத் தங்களுக்கு கொடுத்து உதவியிருப்பதாகவும் இங்குநோயாளிகளை வைத்து சிகிச்சை செய்ததில் துரிதமாக கைகண்ட பலன் கிடைத்ததென்றும் சென்னையில் சுகாதாரமற்றவிடங்களிலிருக்கும் இடங்களில் வைத்து அவர்களைச் சிகிச்சை செய்ய வேண்டியிருந்தால் தம்மால் உபயோகிக்க நேரிட்டிருக்கக் கூடிய ஔஷதிகளை இங்கு உபயோகிக்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. என்றும் இதற்கு இங்குள்ள நல்ல காற்றும் ஜலமும் தான் காரணமென்றும் இன்னும் சில காலத்தில் இந்த இடம் பெரும் தோட்டமாகி சுகாதாரமற்ற ஜியார்ஜ் டவுன் முதலிய இடங்களில் வசிக்கின்றவர்களுக்கு நல்ல காற்று ஜலம் இவற்றால் என்ன அநுகூலமுண்டாகுமென்பதற்கு இது ஒரு உதாரணமாகக் காட்டக்கூடிய ஸ்தலமாகி விடுமென நம்புவதாகவும் தமக்கு ஆந்திர ஜமீன்தார்கள் இதுகாறும் உதவி வந்ததுபோலவே இனியும் உதவுவ



தடன் மற்றவர்களும் உதவ வேண்டுமென்று கோருவதாகவும் கூறினார்.

பிறகு ஹக்கீம் அப்துல் அலீஸ் சாகிப் உருது பாஷையில் பேசுகையில டாக்டர் லக்ஷ்மீபதியின் ஊழியத்தைப் பாராட்டுவதாகவும் இம்மாதிரி பல ஆச்சிரமங்கள் ஏற்பட வேண்டுமென விரும்புவதாகவும் கூறினார்.

## டாக்டர் முத்து.

பேசினதின் சாரமாவது:—இந்த இடம் மிக்க அதிசயமான இடம் ராஜீய, சமூகச் சீர்திருத்தத்தைவிட சுகாதாரச் சீர் திருத்தமே மிக்க முக்கியமானது. தேக ஆரோக்கிய மில்லாவிட்டால் வாழ்க்கையே பெரும்பாரமாகத் தோன்றும், இது மிகுந்த கஷ்டங்களுக்குள்ளாகும் இத்தகைய ஆச்சிரமங்கள் இந்த மாகாணத்திற்கு மட்டுமின்றி இந்தியாவிற்கே பெரும் அதிர்ஷ்டவசமாகும். இந்நாட்டிலும் வெளி நாட்டிலு மேற்பட்ட எனது அனுபவத்தைக்கொண்டு நான் ஒன்று சொல்ல விரும்புகின்றேன், அஃதென்ன வெனில் இந்நாட்டினருக்கு இயற்கையாகவே ஆயுர்வேத வைத்தியமே சிறந்ததாகும். இதனால் யூனானி, ஆயுர்வேத முறைகளுக்கு ஆக்கமளிக்க வேண்டும். 20 வருஷங்களில் ஆயுர்வேத வைத்தியத்திற்கு விசேஷ ஆக்க மேற்படுமென்று நான் நினைக்கின்றேன். தற்பொழுது சாஸ்திர ஆராய்ச்சி மூலம் கால நிலைமை மாறுதலுக்கும் கிருமிகள் தோன்றுவதற்கும் சம்பந்தமிருப்பதாகக்கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பே நமது ரிஷிகள் நவம்பர் டிசம்பர் மாதங்களில் தான் தேக ஆரோக்கியம் அதிகப்படுகிறதென்றும் சில மாதங்களில் வியாதி அதிகரிக்கிறதென்றும் புத்திசாலித்தனமாகக் கண்டு பிடித்தும் கூறுகின்றனர்.

மகாராஜாக்களும் மற்றவர்களும் இம்மாதிரியான ஆச்சிரமங்கள் பல ஏற்பட ஆக்கமளிக்கவேண்டும.

பின்னர் தாம்பூலம் பழம் முதலிய வழங்கப்பட்டு வந்தனோபசாரங்களுடன் கூட்டம் கலைந்தது.

---

## சென்னைபுரி ஆயுர்வேத கலாசாலை பழைய மாணவர் சங்கம்.

இச்சங்கத்தின் காரிய நிர்வாகக் கூட்டம் நவம்பர்மாதம் 28௳ மாலை 4-30 மணிக்கு ஆந்திர ஆயுர்வேத கம்பெனியின் கட்டிடத்தில் டாக்டர் ஆ. லக்ஷ்மீபதி அவர்களின் தலைமையின் கீழ் நடந்தது. அங்கே நிறைவேறின தீர்மானங்கள்:—

1. டிசம்பர்மீ 29௳ நமது சங்கத்தின் வருடோற்சவம் நடத்த வேண்டுவதற்கு வேண்டிய ஆயுத்தங்கள் செய்ய வேண்டுமென்றும், கனம் பண்டித மதன மோஹன மாளவியாவை சபா நாயகராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. டிசம்பர்மீ 29௳ காலை 8 மணிக்கு அங்கத்தினர் கூட்டமும், மாலை 5 மணிக்குப் பொதுக்கூட்டமும் நடைபெறும். பழைய மாணவர்கள் இடம் முதலிய வசதிகளுக்கு காரியதரிசிக்கு டிசம்பர்மீ 10௳-க்குள் எழுதிக்கொள்ளும்படி கேட்கப்படுகிறது.

---

## ஹிங்குதிரிகுண தைலம்.

உபயோகம்:—மேலுக்கு காதுவலி, காதிற் சீழ்வடிதல், காதிரைச்சல் இவைகள் நிவர்த்தியாகும். காதுக்குள் 2 அல்லது 3 துளி விடவும். யானைக்கால் முதலிய வீக்கத்தில் மேலே தேய்க்கலாம். வயிற்றுப்பிஸம், குல்மம், வயிற்றுவலி முதலியவைகளில் உள்ளுக்கும் சாப்பிடலாம்.

விலை 4 அவு. ரூ. 1-8-0 1 பவுன் ரூ. 5.

---

## நாக பஸ்மம்.

மூலத்தைப் போக்கும்; கபத்தை ஹரிக்கும்; தாது புஷ்டியைத் தரும்.

விலை 1 தோலா ரூ. 5.

---

## ஆந்திர ஆயுர்வேத பார்மஸி (லிமிடெட்).

19, ஹாரிஸ் ரோட், மதருஸ்.

—:o:—

### அஸ்வகந்தாதி சூர்ணம். [வ. த.]

அளவு: 15 முதல் 30 நெல்லெடை.

உபயோகம்:—தாது போஷகம், பலவர்த்தகம், சுக்ர நஷ்டம், க்ஷய ரோகம், துர்பலம், வாதரோகம் முதலியவற்றில் உபயோகிக்கக்கூடியது. சிறிது பசுவின் பாலைச் சூடாக இதற்கு அனுபானமாய் உட்கொள்ள வேண்டு.

விலை 4 அவு. அ. 10    1 பவுன் ரூ 2.

### குடூசி ஸத்வம். [யோ. ர.]

அளவு:—2 முதல் 10 நெல்லெடை.

உபயோகம்:—வயிற்றில் அழற்சி, மேஹரோகம், இரக்தமூலம், இருமலில் இரத்தம் விழுதல், ஸ்திரீகளுடைய பெரும்பாடு முதலிய வற்றில் உபயோகமானது தேன் அனுபானம்.

விலை 1 தோலா ரூ. 2.

### கர்ப்பூர ரஸ வடி [பை. ர.] (2 கிரை.)

அளவு:—1 அல்லது 2 மாத்திரை.

உபயோகம்:—காலரா என்கிற விஷூசியில் வெகு பிரயோஜன முள்ளது. ஸாதாரண அஜீர்ணம், அதிஸாரம், சீதபேதி இவைகளையும் இது நிவர்த்தி செய்யும். வாந்தியையும் பேதியையும் நிறுத்தும், ஆனால் மூத்திரத்தைத் தடை செய்யாது.

விலை 50 மாத்திரை புட்டி அ. 10.

### ஆர்த்ரகண்டாவ லேஹம். [வை. சி.]

அளவு:—½ முதல் 1 தோலா.

உபயோகம்:—வயிற்றில் புளிப்பு சேருதல், அக்னி மாந்தியம், அஜீர்ணம், அரோசகம் இவற்றைப் பரிஹரிக்கும். பித்தம் நிவாரணமாகும்.

விலை 4 அவு. ரூ. 1    1 பவுன் ரூ 3.

### துவரக லேபம்.

குஷ்டம் முதலிய கடுமையான சர்ம வியாதிகளில் பிரயோஜனப் படுவது.

விலை 1 அவுன்ஸ் அ. 8.



## ஆந்திர ஆயுர்வேத பார்மஸி (லிமிடெட்).

19, ஹாரிஸ் ரோட், மதருஸ்.

—:o:—

### அர்க்காதி தைலம். [பை. ர.]

உபயோகம்:—இத்துடன் பசும்பால் கலந்து தினந்தோறும் இரண்டு மூன்று முறை மர்த்தனம் செய்து வந்தால் கீல்வாயு, கை கால் பிடிப்பு, கபதோஷம் இவற்றை நிவாரணம் செய்யும்.

விலை 4 அவு. ரூ. 1.    1 பவுன் ரூ. 3.

### மதுச்சிஷ்டாதி லேபம்.

சொறி, சிரங்கு, கடுவான் முதலியவற்றிற்கு வெகு உபயோகமானது.

விலை 1 அவு. அ. 8.    4 அவு. ரூ. 1-8-0    1 பவுன் ரூ. 5.

### அப்ரக பஸ்மம்.

மதுமேஹம், பிரமேஹம், நரம்பு பலஹீனம் முதலியதில் உபயோகமுள்ளது.

1 தோலா ரூ. 10; (நெ. 2 ஸாதாரண புடம்) 1 தோலா ரூ. 4.

### சங்க பஸ்மம்.

வயிற்றுவலி, அஜீர்ணம், பித்தத்தோஷம், குடல் அழற்சி முதலியவைகளில் உபயோகமானது.

விலை 1 தோலா ரூ. 2.

JL
KCm 24, N28
N 27.
1.3.4

### வஸந்தகுஸுமாகரம்.

மூத்திர ஸம்பந்தமான பெரும்பான்மையான ரோகங்ளிலும் மிக்க உபயோகமான தென்று ஆயுர்வேத நூல்களில் சிபார்சு செய்யப்பட்ட பிரஸித்தமான ஔஷதம். க்ஷயத்திலும், நரம்புத் தளரச்சியினாலுண்டாகும் கோளாறுகளிலும் இது நல்ல பலன் தரக்கூடியது. தாதுபுஸ்டியைத் தரும்.

விலை 1 தோலா ரூ. 40.

### வெள்ளி பஸ்மம் (ரஜத பஸ்மம்).

தேஹத்திற்கு வலிமையைத் தரும். பித்தஹரம். விஷஹரம்.

விலை 1 தோலா ரூ. 10.

18?870.

ஆவடி ஆரோக்கிய ஆஸ்ரமம்.



டேவிட் சி. முத்து எம். டி. (லண்டன்)

ஆரோக்கிய ஆஸ்ரமத்தின் அஸ்திவாரக்கல் நாட்டினவர் (13-1-26).